## இரகசியமானவை; நடுநிலையானவை

---

**இலவசம்:** உங்களுக்குச் செலவு இல்லை.

**இரகசியம்:** நீங்கள் எங்களுக்குக் கூறுகின்றவை எவையும், நீங்கள் வேண்டிக் கொண்டால் அல்லாமல், வேறு எவருக்கும் சொல்லப்பட மாட்டா. **STARTTS** இல் உங்களுக்கு மொழி பெயர்த்துரைப்பவர் எவராக இருப்பினும் அவரும் இரகசியத்துக்குக் கட்டுப்பட்டவர் ஆவார்.

**நடுநிலை தவறாமை:** பல்வேறு பண்பாட்டையும், அரசியலையும், சமயத்தையும் சார்ந்த குழுவினர் களை நாம் **STARTTS** இல் பார்க்கின்றோம். அவர்கள் எவராக இருப்பினும் அவர்களின் மனித உரிமைகள் மீறப்பட்ட போது, அவர்கள் யாவரும் சிகிச்சைக்கும் பேணுகைக்கும் உரிமை உடையோர்.

---

## ஆக்கிலம் கொஞ்சம் தெரிந்தால் அல்லது தெரியாவிட்டால் என்னவாகும்?

---

பின்வரும் மொழிகளைப் பேசுகின்ற அறிவுரை வழங்குவோர் **STARTTS** இல் இருக்கின்றனர்: அரபு, போசினியன், குரோஷியன், தாரி, பார்சி, பிரஞ்சு, இந்தி, கேமார், லாகோ, பாஸ்து, போர்த்துக்கல், சேர்பியன், ஸ்பானிஸ், துத்தும், உருது, வியட்நாம். ஆகிய மொழிகள். நீங்கள் வேறு ஏதாவது ஒரு மொழியைப் பேசுபவராக இருந்தால் உங்களுக்குத் தகைமையுள்ள ஒரு மொழிபெயர்த்துரைப்பவரை ஒழுங்கு செய்யலாம்.

---


**STARTTS**
**152 – 168 the Horsley Drive**
**Carramar, NSW 2163**
அஞ்சல் முகவரி: **PO Box 203**
**Fairfield, NSW 2165**
தொ. இல: (02) 9794 1900 **Fax**: (02) 97941910.


## கூடிய தகவல்களை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம்?

**STARTTS** பற்றிய கூடிய தகவல்களுக்கு: தொ. இ. (02) 9794 1900 இல் எம்மைத் தொடர்பு கொள்க. அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி வரை: மு.ப. 8.30 – பி.ப.5.00

## STARTTS ஐ கண்டு கொள்வது எப்படி?




Produced by Sydney Language Centre 9428 3353

# சேவை பெறுவோர்க்கான தகவல்கள்

# S.T.A.R.T.T.S

சித்திரவதை, உணர்வதிர்ச்சிக் கோளாறு என்பவற்றில் உயிர்பிழைத்தோர்க்கான சிகிச்சைக்கும் மறுவாழ்வுக்குமான சேவை


152-168 The Horsley Drive
CARRAMAR, NSW 2163
தொ. இல: (02) 9794 1900


**TAMIL**

தமது சொந்த நாட்டில் அல்லது அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்தலின் போது சித்திரவதைக்குள்ளாக்கித் துன்றுத்தப்பட்ட அகதிகளுக்கும் ஏனைய உணர்ச்சி அதிர்ச்சிக் கோளாற்று அனுபவங்களைக் கொண்ட அகதிகளுக்கும் அகதிகளைப் போன்ற பின்னணிகளிலிருந்து வந்தவர்களுக்கும் சமுதாய அடிப்படைப் பிணியாய் நிலையச் சேவைகளையும் துணைச் சேவைகளையும் (STARTTS) வழங்குகின்றது. **Carramar, Aburn** ஆகிய நிலையங்களிலும் சிட்னியிலும் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்திலுமுள்ள வேறு சில பிராந்திய நிலையங்களிலும் **STARTTS** அதன் சேவைகளை வழங்குகின்றது.

**சித்திரவதை செய்யப்பட்டவர்கள் அல்லது உணர்வதிர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டவர்கள் அந்த அனுபவங்களின் விளைவுகளைப் பல ஆண்டுகள் தம்முடன் கொண்டு திரிவர்.**

**இந்த விளைவுகளுக்கான நடைமுறைகளை மேற்கொள்ளத் தனிப்பட்டவர்களுக்கும் குழுக்களுக்கும் சமுதாயங்களுக்கும் STARTTS உதவுகின்றது.**

**STARTTS** க்கு வருகின்றவர்கள் போர், உள்நாட்டுக் கலகம், அடக்கி வைக்கும் முகாங்கள், அகதி முகாங்கள், அபாயகரத் தப்புதல்கள், நாடு கடத்தல், புலம்பெயர்தல் ஆகிய சூழ்நிலைகளில் வன்முறைகளை அனுபவித்திருக்கலாம்; அல்லது நேரிலே பார்த்திருக்கலாம் .துன்புறுத்தல், தொல்லை கொடுத்தல், சிறை, சித்திரவதை அல்லது திட்டமிட்ட வன்முறைகள் போன்ற கொடுமைகளிடையே அவர்கள் வாழ்ந்திருக்கலாம்.

## திட்டமிட்ட வன்செயல் விளைவுகள்

நீங்கள் அல்லது உங்கள் நண்பர்கள் அல்லது குடும்பத்தினர்கள் ஓர் அகதி–போன்ற பின்னணியிலிருந்து வந்தவர்களா? பின்வருவனவற்றுள் சில அனுபவங்கள் உள்ளவர்களா?

* உடல் வலித்தலும் நோதலும்
* நித்திரைப் பிரச்சினைகள்; கோரக் கனாக்கள்
* மீண்டுவரு துன்ப எண்ணங்கள்; நினைவுகள்
* அச்ச உணர்வு; பதட்டம், மனவுலைவு
* பழைய அனுபவங்களில் இருந்து விடுதலை பெறுகின்றமை போன்ற உணர்வு
* காரணமின்றி எளிதில் அச்சமடைதல்
* கவலை, அழுதல், கூடாத உணர்வு
* மக்களிடமிருந்தும் தொழில்பாடுகளிலிருந்தும் விலகிக்கொள்ளல்
* துன்பமான பழைய அனுபவங்களை நினைவு படுத்தும் நிலைமைகளைத் தவிர்த்தல்
* ஞாபக இழப்பும்; மனத்தை ஒருவழிப்படுத்த முடியாமையும்
* பசியார்வக் குறைவு
* குற்ற உணர்வும் கோபமும்
* மயக்கம், தலை சுற்றல் அல்லது தளர்வு

இந்த அனுபவங்கள் குடும்ப உறுப்பினர்கள் எல்லோரையும் பாதிக்கலாம்; அத்துடன் குடும்பச் சீரழிவுக்கும் சண்டைகளுக்கும் உறவு முறிவுகளுக்கும் இட்டுச் செல்லலாம்.

போர், சித்திரவதை, திட்டமிட்ட வன்செயல்கள் போன்ற கொடூரமான நிலைமைகளுக்கு இவை பொதுவான எதிர்த் தாக்கங்கள் ஆகும்.

## STARTTS எவற்றை உங்களுக்குச் செய்யலாம்?

சித்திரவதை, அகதி தொடர்பான உணர்வதிர்ச்சிக் கோளாறு ஆகியவையுடன் சேர்ந்த பிரச்சினைகளை உயிர்பிழைத்தோர் போக்கிக்கொள்ள **STARTTS** உதவுகின்றது. குணப்படுத்தும் இயல்புடைய சந்தர்ப்பத்தில் கௌரவமான உறவுகளை நாம் ஊக்குவிக்கின்றோம் – அந்த உறவுகள் மக்களின் ஆழமான துன்பத்தையும் பிழைத்து வாழ்தற்கும் நோய் தீர்த்தற்குமான அவர்களின் இயல் திறனையும் அங்கீகரிப்பன.

* **STARTTS** இல் ஓர் அறிவுரை கூறுபவரோடு உங்கள் அனுபவங்களைப் பற்றிப் பேசலாம். அவர் சித்திரவதை, அகதி உணர்வதிர்ச்சிக் கோளாற்றுப் பிரச்சினைகளில் நிறைந்த விளக்கம் உள்ளவர்.
* உணர்வதிர்ச்சிக் கோளாற்றின் உடல் சார்ந்ததும் மனக்கவலை நோய்களினால் உண்டானதுமான விழைவுகளுக்குப் பரிகாரங்காண இயன் மருத்துவம் (**Physiotherapy**), உடல் செயற்பாடு ஆகிய சேவைகளைப் பயன்படுத்தலாம்.
* மன நோய்க்கான மதிப்பீட்டையும் சிகிச்சையையும் பெற்றுக் கொள்ளலாம்.
* செயற்பாடுளிலும், ஆதரவு,நோய் தீர்த்தல் ஆகிய குழுக்களிலும் கலந்து கொள்ளலாம்.
* தொழில், கல்வி ஆகியவை பற்றிய தகவலையும் அறிவுரையையும் பெற்றுக் கொள்ளலாம்.
* ஏனைய சுகாதாரம், ஆக்கநல சேவைகள் பற்றிய தகவல்களைப் பெறலாம்; தேவைப்படின் அந்தச் சேவைகளைப் பெற்றுக்கொள்ள உதவி பெறலாம்.
* வதிவிட & பற்றைக்காடு – நிகழ்ச்சித்திட்டங்கள் உட்பட விசேட இளைஞர்கள் செயற்பாடுகளில் உங்கள் பிள்ளைகளும் இளைஞரும் ஈடுபடலாம்.